**<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**I.A NO. 292/2024 in O.S.No. 110/2013**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>**

**<u>வாக்குமூலம் – நீ.ம.சா–1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபாக்கியம் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் சாட்சியம்.

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் அ.வ.எண். 110/2013 வழக்கில் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் ஆவேன். நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெற்றதை அடுத்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இந்த வழக்கில் முதலில் I.A. 614/2013 என்ற மனுவில் நீதிமன்றம் உத்தரவிட்டதன் பேரில் மனு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். பின்னர் I.A. 569/2014 என்ற மனுவில் நீதிமன்றம் உத்தரவிட்டதன் பேரில் மனு சொத்தை நில அளவையருடன் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன்.

2. இந்த மனுவின் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் பூமிகளுக்கு கிழபுறமாக ஒட்டினார் போல் கம்பி வேலி உள்ளது. அதற்கு அடுத்தார் போல் தடம் உள்ளது. கம்பி வேலியை ஒட்டி பிரதிவாதியின் பூமி மேடாக உள்ளது. அதன் மேல் பெரிய மரங்கள் உள்ளது. பிரதிவாதிகள் சொத்தின் வடபுறம் அளவை கற்கள் இல்லை. முதலில் நில அளவையர் தனசேகரனுடன் அளப்பதற்கு முன்பாக நில அளவையர் வாசுதேவன் என்பவரிடம் மனு சொத்தை பார்வையிட்டு அளந்தோம், அவர் எல்லைகளை மட்டும் வரையறுத்துக் கொடுத்தார். அதன் பின்னர் அவர் பணி மாறுதல் சென்றுவிட்டதால்

அதன் பின்னர் நிலஅளவையர் தனசேகரனுடன், மனு சொத்தை பார்வையிட்டு அளந்தோம்.

3. முதல் முறை நில அளவையர் வாசுதேவனடன் சென்ற போது அவர் பிரதிவாதிகளின் சொத்துக்கள் சாலை வரை நீள்வதாக சொல்லவில்லை. க.ச.419 காலையில் மேற்புறம் எல்லை எங்கு முடிவடைகிறது என்று எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை, கம்பி வேலியானது க.ச.419 ன் எல்லை என்றும், ஆக்கிரமிப்புகள் இல்லை என்றும் சார் ஆய்வாளர் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

முதல் விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.11.14 17:42:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.